சென்னை வரவு செலவு திட்டம்

பொக்கிஷ மெம்பரின் பிரசங்கம்

அதிகமாக நிலவரியை வஜா செய்யாததற்குச் சமாதானம்

1933-34

வரவு	1603.06 லட்சம்
செலவு	1596.81 ,,
மிச்சம்	6.25 ,,
பழைய பாக்கியுடன் கையிருப்பு	281.60 ,,

1934-35

வரவு (திருத்திய திட்டப்படி)	1602 57 ,,
செலவு ,,	1621.61 ,,
துண்டு விழுந்த தொகை	19.04 ,,
பழைய பாக்கியில் செலவு போக	214.76 ,,

1935-36

எதிர்பார்க்கப்படும் வருமானம்	1619.09 ,,
,, செலவு	1644.24 ,,
,, மிச்சம்	4.85 ,,
கையிருப்பிலிருந்து மூலதன வேலைகளுக்காச் செலவிட்டது போக வருஷக் கடைசியில் மிச்சம் இருக்கக்கூடிய தொகை ...	142 50 லட்சம்

இன்று சென்னை சட்ட சபையில் பொக்கிஷ மெம்பர் 1935-36ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தை ஆஜர் செய்தார். அவர் செய்த பிரசங்கத்தின் விவரமாவது:—

1934—35 வருஷத்திற்கு முடிவானவரவுசெலவுதிட்டத்தையும், 1935-36 வருஷத்திற்கு ஏற்படப்போகும் உத்தேச வரவு செலவு திட்டத்தையும் நான் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். முன்வருஷங்களில் ஏற்பட்டதைப்போல் இம்மாகாணத்தில் 1934-35 அரசியல் கிளர்ச்சிகள் ஏற்படவில்லை. ஒத்துழையாமையையும், சட்ட மறுப்பையும் கைக்கொண்டவர்கள் தாங்கள் நாட்டிற்கு அதனால் இழைக்கும் தீங்கை உணர்ந்தது திருப்திகரமான விஷயம். வியவசாய, பொருளாதாரநிலை திருப்தி அளிக்கக் கூடியதாயில்லை. விலைவாசிகள் பொதுவாக அதிகமாகி வருகின்றன என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது; இருந்தாலும் வியவசாயிக்கு இதனால் ஏற்படவேண்டிய நன்மை நிலக்குத்தகை மதிப்பு குறைவினாலும், சடனாலும், ஏற்படாதுபோயிற்று. இதனால் அர்சாங்கத்தார் அவர்களுக்குக்கொடுத்த வசதியை குறைக்கவில்லை

மற்ற விவசாயப்பொருள்களின் விலை அதிகமாவதுபோல் அரிசி விலை அதிகமாகவில்லை. 1934 வருஷம் மார்ச்சிலிருந்து நவம்பர் வரை விலைவாசிகள் உயர ஆரம்பித்தன, ஜனவரி மாத முதல் வாரத்தில் விலைவாசிகள் குறைய ஆரம்பித்தன, அப்பொழுதுதான் அறுவடைகாலம். திருநெல்வேலியும், மேற்குப் பிரதேசங்களிலும் பருத்திவிலை விருத்தியாகி இருக்கிறது மேற்குப் பிரதேசங்களில் தேங்காய் எண்ணை விலையில் ஆச்சர்யமாக விலை ஏறிற்று. 66-8-0 விருந்து 92-8-0-க்குவிலைஏறிற்று. பிறகு இது குறைந்து போய் விட்டது. மணிலாக்கொட்டைவிலையும் அதிகமானது. பொதுவாகமந்தத்தின் கேவலமான ஸ்திதி போய் விட்டதென்றே கூற வேண்டும். ஆயினும் தேசங்களினடுவே இருந்த சுய சௌகர்ய எண்ணங்கள் போனதாகத் தெரியவில்லை. ஆகையால் சர்வதேச வியாபாரத்திற்கு இருக்கும் தடைகள் இன்னும் நீங்கவில்லை. இத்துடன் கூட பருவ மழைகளும் தவறி விட்டபடியால் நம்முடைய கஷ்டம் அதிகமாயிற்று. பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, கர்னூல், சித்தூர், நெல்லூர், வட ஆற்காடு, ராமனாதபுரம், கோயம்புத்தூர் இந்த ஜில்லாக்களில் கிஸ்தி வஜாவும்கிஸ்திவசூல் நிறுத்தமும்தாராளமாய்செய்யப்பட்டன. இதனால் நாம் 1935-36வருஷம் அதிகமாக ஒரு அபிவிருத்தியையும் எதிர்பார்க்க முடியாது என்ற எண்ணத்துடன் வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

1933-34 வருஷ கணக்கு

1933-34-ம் வருஷம் திருத்தி அமைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கும் 25·21லக்ஷம் வருமானம் துண்டு விழுந்தது; 1628·27 லக்ஷம் திருத்தி யமைக்கப்பட்ட வருமானம். 1603·06 வசூலான வருமானம். செலவும் எதிர் பார்த்ததற்கு 30·89 லக்ஷம் குறைந்து விட்டது. சாதாரணமாக எதிர் பார்த்த மிச்சம் 61 லக்ஷம்; ஆனால் வருமான மிச்சம் 6·25லக்ஷமாகஆயிற்று. வருமானம் நிலவரி, கலால்வரி இவற்றினால் தான் முக்கியமாக குறைந்தது. வெள்ளம், புயல்காற்று பயிரிட சௌகரியமில்லா பருவங்கள் இவைதான் இதற்கு காரணம்.

நடைமுதல் வருஷம்

நடைமுதல் வருஷமாகிய 1934-35க்கு 16 கோடி 43 லக்ஷத்து 63 ஆயிரம் வருமானம் எதிர்பார்த்தோம். ஆனால் திருத்தப்பட்ட திட்டத்தின்படி 16 கோடி 2 லட்சத்து 57 ஆயிரம்தான் எதிர் பார்க்கிறோம். செலவுத் திட்டத்தில் 17 லட்சத்து 56 ஆயிரம்ரூபாய் குறைவாக ஏற்படும். மொத்தத்தில் இந்த வருஷக் கடைசியில் 4 லட்சத்து 46 ஆயிரம் மிஞ்சுமென்று எதிர்பார்த்ததுபோக 19 லட்சத்து 4ஆயிரம் ரூபா செலவுக்குப் போதாமல் துண்டுவிழுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமானஇனங்களில் எதிர்பார்த்த அளவு வருமானம் கிடைக்கவில்லை. நீர்வீழ்ச்சி மின்சார திட்டத்தினால்சுமார் 3½ லட்சம் அதிக வரும்படியும் மோட்டார் வரிச் சட்டப்படி 1 லட்சம் அதிகமாயும் கிடைக்கும். நிலவரியினத்தில் 26 லட்சத்து 12 ஆயிர ரூபாயும் கலால இனத்தில் 8 லட்சத்து 61 ஆயிரமும், ஸ்டாம்பு இனத்தில் 12 லட்சத்து 44 ஆயிரமும் வருமானங் குறைகிறது. பல ஜில்லாக்களில் பருவமழை பெய்யாததே நிலவரி வருமானக் குறைவுக்கு காரணம். வஜாக்களும் வரி வசூல் நிறுத்தங்களும் பெருவாரியாகச் செய்ய வேண்டி நேர்ந்திருக்கிறது. இன்னும் வஜா சௌகரிய விஷயமாக முடிவான யாதாஸ்து ரெவினியூ போர்டிலிருந்து வரவில்லை. அதிக வஜாசெய்ய ஏற்பட்டால் இன்னும் அதிகமாகக் கூட துண்டுவிழலாம் பொருளாதார புனருத்தாரணம் துரிதமாக ஏற்படாதது மற்றொரு கஷ்டமாயிருக்கிறது. கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சுதல் முதலிய குற்றங்கள் அதிகரித்து விட்டன. மதுபானவிலை அதிகமானதே இதற்குக் காரணம். குற்றங்களைத் தடுக்க அதிகமான ஆப்காரி சிப்பந்திகளை நியமிக்க அவசியம் நேர்ந்திருக்கிறது.

புது வருஷத்திய திட்டம்

புது வருஷமாகிய 1935-36-ல் நடைமுதல் வருஷத்திலளித்த பொருளாதார சௌகரியங்களைத் தொடர்ந்து அளிக்கவேண்டியிருக்குமென்று எதிர்பார்த்துத் திட்டம்போட்டிருக்கிறோம். புது வருஷத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானம் 16 கோடி 48 லட்சத்து 80 ஆயிரம்; செலவு 16 கோடி 11 லட்சத்து 4 ஆயிரம். அதாவது இவ்வருஷத்தை விட 46 லட்சத்து சொச்சம் அதிக வருமானமும் 10 லட்சத்து 57 ஆயிரம் குறைந்த செலவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருஷத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலவரி அடுத்த வருஷம் வசூலாகிவிடுமென்றநம்பிக்கையின் பேரிலும், பருவமழை திருப்திகரமாயிருக்குமென்ற நம்பிக்கையின் பேரிலும் இவ்வாறு திட்டம் போட்டிருக்கிறது. காவிரிமேட்டூர் திட்டத்தினாலும் மறு பைசல்கள் மூலமாகவும் 4½ லட்சம் அதிக வரும்படி எதிர்பார்க்கிறோம். மின்சார திட்டத்தின்படி 3¾ லட்சம் அதிக வரும்படி எதிர்பார்க்கிறோம். கலால் வருமானம் ஓரளவு குறையக்கூடும். பட்டைச் சாராய வரியை 100-க்கு 25 குறைத்ததனால் ஏற்பட்ட நஷ்டம் அதிக ஏலம் அல்லது குடியினால் ஈடுசெய்ய முடியாது போகலாம். சித்தூர், அனந்தபூர், பல்லாரி ஜில்லாக்களில் இந்த பசலிக்கு நிறுத்திவைத்திருக்கும் கிஸ்தி 5 லட்சம் ரூபாய் அடுத்த வருஷத்திலாவது வசூலாகுமா என்பதும்சந்தேகமாயிருக்கிறது. ஆகையால் நில வரியினத்தில் காட்டியிருக்கும் அதிக வருமானத்தை 5 லட்சம் குறைவாக மதிப்பிடுவதே உத்தமம்.

புது வருஷத்தில் 5% சம்பளப் பிடித்தம் உயர்தர உத்தியோகஸ்தர் விஷயத்தில் நீக்கிவிடப்படும். இதனால் 3 லட்சத்து 52 ஆயிரம் செலவு அதிகப்படும். மாகாண சட்டசபைப் பொதுத்தேர்தல் புதிய அரசியலையொட்டி நடக்க வேண்டியதை முன்னிட்டு சுமார் 6 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரி வருமானத்தைக் கொண்டு 34 லட்சத்து 3 ஆயிரத்துக்குப் புதிய செலவுத் திட்டங்கள் போட்டிருக்கிறோம். இதில் மாற்றப்பட்ட இலாகாக்களுக்கு முக்கால் பாகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

செலவுபோக மிஞ்சுகிறது

நாம் எதிர்பார்க்கிறபடி எல்லாம் நடந்தால், புதுவருஷக் கோடியில் செலவுபோக 4 லட்சத்து 85 ஆயிரம் மிச்சப்படும். எதிர்பாராத செலவுகளுக்காக இத்தொகை கவர்ன்மெண்டின் வசம் இருந்தாக வேண்டும். நிறுத்திவைக்கப்பட்ட நிலவரி புது வருஷத்திலும் வசூலாகாவிடில் இந்த மிச்சம் கரைந்து விடும்.

புது வருஷத்தில் மூலதனத் திட்டங்கள் பின்வருமாறு:காவிரி மேட்டூர் நீங்கலான பாசனவேலைகளுக்கு 13 லட்சம் 29 ஆயிரம்; கைத்தொழில் அபிவிருத்திக்கு 21 ஆயிரம், நீர்வீழ்ச்சி மின்சார திட்டம் 34 லட்சம் 98 ஆயிரம், மராமத்து வேலைகள் 6 லட்சத்து 49 ஆயிரம்; கடனும் முன் பணமும் கொடுத்துதவ 28 லட்சத்து 9 ஆயிரமும் ஆகமொத்தம் 83 லட்சத்து 6 ஆயிரம் இதுகவிர மேட்டூர் திட்டத்திற்கு 4 லட்சத்து 94 ஆயிரம்.

சிறு பாசனவசதிகளைப் பெருக்கவும் பழுதுபார்க்கவும்பெருவாரியான வேலைகள் ஆரம்பிக்க உத்தேசம். திட்டம் தயாராகிவருகிறது. ஆனால் புது வருஷத் திட்டத்தில் அதற்குத்தொகை ஒதுக்கவில்லை. அடுத்த வருஷத்துக்குள் 5லட்சம் ரூ. வேண்டியிருக்கலாம் ரஸ்தாக்கள்ஒருபுறமிருக்க குளங்கள் கால்வாய்கள் முதலிய சிறு பாசன வசதிகளை ஒழுங்குபடுத்தவேண்டியது அவசியமான வேலையாகும். ஒரு மூலதனச்செலவுத் திட்டமாக இதை பாவித்து வேலை செய்ய இந்தியா கவர்ன்மெண்டின் அனுமதி வேண்டியிருக்கும்.

நமது ஒலிபரப்பும் இலாகா நிபுணர் சில சிபார்சுகள் செய்திருக்கிறார், இம்மாகாணத்தில் 3 அல்லது 4 வருஷங்களுக்குள் வேண்டியவளவு ஒலிபரப்பும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்திவிடத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. புது வருஷத் திட்டத்தில் இதற்குப் பணம் ஒதுக்கவில்லை. ஆயினும், வேண்டும்போது சபையின் அனுஅனுமதி கிடைக்குமென்று நம்புகிறேன்.

நில அடமான பாங்கி

50 லக்ஷத்துக்குமேற்படாத வரையில் மத்திய நில அடமான பாங்கிக்கு மூலதனம், வட்டி விஷயங்களில் கவர்ன்மெண்டார் உத்தரவாதமாயிருக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆகையால் பாங்கி பத்திரங்கள் டிரஸ்டு செக்யூரிட்டிகளாகப் பாவிக்கப்படலாம். ரயத்துகளுக்கு நீண்ட காலம் கடன் வசதிகள் பெற இனி சாத்தியப்படும். பாங்கி ஒழுங்காக

Broadcast



ஸ்ரீமதி கே. கோச்சம்மாள்

ட்ராமா ஸெட் இல்லை

ஆனால் உன்னதமான

ருக்மணி கல்யாண

தமிழ் ஹரிகதை ஸெட்.

யாரால் ரிகார்டு செய்யப்பட்டது

மாது ஸ்ரீ

கே. கொச்சம்மாளினால்

நேர்த்தியாய்
ரிகார்டு
செய்யப்பட்டது

குறைவு
இல்லாமல்
பூரக்கதையும்
அடங்கியது.

இத்தகைய ஸெட்
கிராமபோன் உலகில்
முன்னும் கிடையாது
பின்னும் கிடைக்காது

உடனே கேட்டு வாங்குங்கள்

தி மியூஸிகல் ப்ராடக்ட்ஸ்,

லிமிடெட்.,

மதராஸ் - பம்பாய் - கல்கத்தா - கொழும்பு.

ஊழலில்லாமல்நடைபெறுவதற்கு வேண்டிய விதி முறை ஏற்பாடு செய்யும்படி கேட்கும் பொறுப்பும் கவர்ன்மெண்டுக்கு ஷெ உத்தரவாதத்தினால் ஏற்பட்டுவிட்டது.

நில வரி வஜா

சமீப சட்ட சபைத் தீர்மானப் படி 371 லக்ஷம் ரூ. நிலவரியை விட்டுவிடும்படி கவர்ன்மெண்டார் கேட்கப்பட்டார்கள். இதைப் பற்றி ஏற்கெனவே கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுவிட்டனர். கவர்ன்மெண்டின் பொறுப்புகளை நிறைவேற்றவும், கவர்ன்மெண்டின் உதவியை நாடுபவர்களுக்கு இதுவரை செய்ததுபோன்ற உதவி இனியும், செய்யவும், வேண்டினால், மேற்படி வருமானத்தை கவர்ன்மெண்டார் இழக்கக் கூடாது. சட்ட சபைத் தீர்மானம் ஒரே பசலிக்காக ஏற்பட்டதாயினும், அடுத்த 12 மாத காலங்கழிந்து இழந்த பணம் பூராவையும் திரும்பப் பேனுமுனை உத்தரவால் பெறச் செய்துவிட முடியுமென்று யாராவது நினைத்தால் அவரை விஷயந் தெரியாதவர் என்றே சொல்ல வேண்டும். சென்ற சில வாரங்களாக ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியை அவர் பார்த்தால் இவ்வாறு சொல்லமாட்டார். 1342 முதல் 4 பசலிகளுக்கும் கணக்குப் பார்த்தால் வஜா சௌகரியங்களின் மதிப்பு 2 கோடிக்கு மேலாகிறது. இதனால் சர்க்காருக்கு எவ்வளவு வருமானநஷ்டம் என்று யோசித்துப் பாருங்கள். போகப்போக புதிய வருமான ஆதாயங்கள் இல்லாமல் நிர்வாகம் நடப்பது சிரமமாயிருக்குமென்று காண்கிறது.

சென்னை சட்டசபை

பொதுத் தேர்தல் எப்பொழுது?

சென்னை, பிப் 20—

சென்னை சட்டசபை இன்று காலை 11-மணிக்கு பிரஸிடெண்டு கனம் பி. ராமச்சந்திர ரெட்டியின் தலைமையின்கீழ் கூடிற்று. ஆரம்பத்தில் மிஸ்டர் ஜெ. எம். ஸ்மித் ராஜவிசுவாசப்பிரமாணஞ் செய்துசபையில்ஸ்தானமேற்றுக் கொண்டார். கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டபின்னர் பொக்கிஷ மெம்பர் கனம் ஸர் எச். ஸ்டோக்ஸ் 1935-36-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தை ஆஜர் செய்தார்.

கேள்வி பதில்

613 ஸ்ரீமான் ஏ. பி. ஷெட்டி:- தென் கன்னடத்தில் காட்டு மிருகங்களால் பயிர்களுக்கு ஏற்படும் கெடுதலைப்பற்றி கவர்ன்மெண்டார் தகவல்களைச்சேகரிப்பார்களா?

மிஸ்டர் ஸ்டோர்:—இதைச் சேகரிப்பது சாத்தியமில்லை.

சட்டசபை பொதுத் தேர்தல்

615. புதிய சட்டசபைக்குப் பொதுத் தேர்தல் எப்பொழுது நடைபெறுமென்று தெரியாதென்றும்,சட்டசபை யமைப்பு, ஓட்டர்கள் யோக்யதை, ஓட்டுத் தொகுதிகள் அமைப்பு இவை சம்பந்தமாக மாகாண கவர்ன்மெண்டார் யாதொரு சிபார்சும் செய்யவில்லையென்றும் ஸ்ரீமான் நாச்சியப்ப கவுண்டரின் கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டது.

615. ஸ்ரீமான் மாணிக்கவேலு நாயகர்:—மத்திய கவர்ன்மெண்டினிடமிருந்து சென்னை கவர்ன்மெண்டிற்கு ஏதாகிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

கனம் ஸ்டோர்:-அனுப்பியிருப்பதாகத் தெரியவில்லை.

ஸ்ரீமான் வி. டி. அரசு:—வரவு செலவு திட்டத்தில் இதற்குப் பணமனுமதிக்கும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

மிஸ்டர் ஸ்டோர்:-பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் வி. எம். ராமஸாமி முதலியார்:-அடுத்த வருஷத்தில் தேர்தலுக்காக என் வரவு செலவு திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் ஸ்டோர்:-அதில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாப் ஹமீத்கான்:-முழுச் செலவுமா?அல்லது ஒரு பாகமா?

ஸ்ரீமான் எம். ஏ. முத்தய்ய செட்டியார் புனர் நியமனம்

619. மிஸ்டர் ஸ்டோர்:-சீக்கிரத்தில் வரவுசெலவு திட்டத்திலிருந்து தெரியும்.

619. ஸ்ரீமான் நாச்சியப்ப கவுண்டரின் கேள்வி ஒன்றுக்கு ஸ்தலஸ்தாபன மந்திரி பதிலளித்ததாவது:—ராஜகுமார் எம் ஏ. முத்தய்ய செட்டியார் சென்னை நகரசபைக்குப் புனர் நியமனமாகுமுன் 1932 மார்ச் 1-ந்தேதி முதல்தடவைநியமிக்கப்பட்டார். 1935 மார்ச் 1-ந்தேதி யுடன் காலாவதி தோஷம் ஸகஜமாக ஏற்பட்டிருக்கும். அதற்கு முன்னதாகவே (1934 ஜுன் 15) தமது கவுன்சிலர் பதவியை அவர் ராஜிநாமா செய்தார். 1934 ஜுன் 26-ந்தேதி அப்போதைய மேயரின் சிபார்சுப்படி புனர் நியமனம் செய்யப்பட்டார். தமது கக்ஷியின் நன்மையை முன்னிட்டு மேற்படி புனர் நியமனம் செய்ததில் ஹத்துமீறி நடந்ததாக மந்திரியே ஒப்புக் கொண்டிருக்கவில்லை.

ஸ்ரீமான் நாச்சியப்ப கவுண்டர்:-ஸ்ரீமான் முத்தய்யா செட்டியார் நியமிக்கப்படுமுன்னர் அவர் சம்மதிபெறப்பட்டதா?

கனம் பொப்பிலி ராஜா:-சாதாரணமாக நியமனங்கள் செய்யுமுன் சம்மதி கேட்பது வழக்கமில்லை.

ஸ்ரீமான் நாச்சியப்ப கவுண்டர்:-கிரமமான காலமுடியுமுன் ராஜிநாமாச் செய்திருந்த பொழுது அவரை ஏன் மீண்டும் நியமிக்கவேண்டும்.

பொப்பிலி ராஜா:-அப்பொழுதிருந்த மேயரின் சிபார்சையே கவர்ன்மெண்டார் அங்கீகரித்தனர்.

ஸ்ரீமான் வி, டி. அரசு:-கனம் மந்திரி தமது கக்ஷிக்கூட்டத்தில் தாம் முறை மீறியே நியமனஞ் செய்ததாகக் கூறவில்லையா?

கனம் பொப்பிலிராஜா:-கவர்ன்மெண்டார் சம்பந்தப்பட்டவரையில் அவர்களுக்கு அதைப்பற்றித் தெரியாது. கக்ஷிக்கூட்டத்தில் பேசப்பட்டதை இங்குபிரஸ்தாபிப்பதற்கில்லை.

ஸ்ரீமான் சுப்ரமணியபட்;-இந் நியமனம் கக்ஷி நன்மையைக் குறித்துச் செய்யப்பட்ட தென்பதை கனம் மந்திரி மறுக்கிறாரா?

கனம் பொப்பிலி ராஜா:-அவ் விஷயம் இப்பொழுது எழுவில்லை.

கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டதும் சென்னை கடன்காரர் பாதுகாப்பு சட்டத்திற்கும் சென்னை பிரஸவ வசதி சட்டத்திற்கும் கவர்னர் அங்கீகாரமளித்திருப்பதாகத் தலைவர் அறிவித்தார்.

திருச்சி முனிசிபாலிட்டி

622. 1936 ஜுன் 18-ந்தேதியோடு பழைய ரத்து உத்தரவு காலாவதியாகிறதென்றும், அக்காலத்தை இனியும் நீடிக்காதபட்சத்தில் 1936 ஜுன் 18-ந்தேதிக்கு முன் புதிய நகர சபைக்குத் தேர்தல் நடக்குமென்றும், முனிசிதல் கமிஷனர் மிஸ்டர் மக்ஸுயின் டிப்டி கலெக்டர் என்றும், 100 ரூபா கமிஷனர் பதவிக்காக அதிக சம்பளம் வாங்குவதாயும், மாதம் வாகனப்படி 50ரூபா என்றும், டிப்டி கலெக்டர் முறையில் 550 ரூபா சம்பளம் என்றும் ஸ்ரீமான் நாச்சியப்ப கவுண்டர் கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டது.

செங்கற்பட்டு ஜில்லா போர்டு

616 ஜனாப் அப்தல் ஹமீத்கான் கேள்விக்குப் பதிலளிக்கப்பட்டதாவது:—இந்த ஜில்லா போர்டு பிரிவினை விஷயம் ஆலோசனையில் இருந்துவருகிறது. அப்போதிருந்த தலைவரைப்பற்றி சில பலமான புகார்கள் விசாரிக்கப்பட்டு வந்ததால் கலெக்டரே சில காலத்திற்கு நிர்வாகத்தை நடத்துவது உசிதமென்று பட்டது.

வரவு செலவு திட்டம்

பிறகு பொக்கிஷ மெம்பர்வரவு செலவு திட்டத்தை ஆஜர்செய்து பேசினர்.

வரவு செலவு திட்டத்தைப் பற்றிய பொது விவாதம் 22உ ஆரம்பமாகுமென்றும், திங்கட்கிழமை பிற்பகல் கவர்ன்மெண்டு மெம்பர்கள் பொது விவாதத்திற்குப் பதிலளிப்பார் என்றும் தலைவர் அறிவித்தார்.

அதிகப்படி மான்யம்

1932-33-ம் வருஷத்திற்குப் பின் வரும் அதிகப்படி மான்யங்கள் அனுமதிக்கவேண்டுமென்று கனம் ஸாஹேராப்டன் ஸ்டோக்ஸ் பிரேரித்தார். ஸ்டாம்பு இலாகா 4685 பென்ஷன்ஒதுக்கப்பட்டது ரூ. 14670. வரி விரும்பக்கொடுத்தது ரூ. 41957.

இது விவாதத்திற்குப் பின் அனுமதிக்கப்பட்டது.

சபை நடந்து வருகிறது.

அறிக்கை

சுதேசமித்திரன் சந்தா விளம்பரங்கள் சம்பந்தமாகவும் இதன் நிர்வாக சம்பந்தமாகவுமுள்ள கடிதங்கள் மானேஜர் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். சுதேசமித்திரனில் பிரசுரம் செய்யப்படுவதற்கான நிருபங்களும் அவை சம்பந்தமான கடிதங்களும் பத்திராசிரியர் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

ஆசிரியர்.

சுதேசமித்திரன்

சென்னப்பட்டணம்
1935 ஹு பிப்ரவரி மீ 20உ

சென்னை வரவு செலவு திட்டம்

சென்ற ஐந்து வருஷ காலமாக சென்னைக் கவர்ன்மெண்டின் பொக்கிஷ மெம்பராக இருந்திருக்கும் ஸர் எச். ஸ்டோக்ஸ் இன்று தமது கடைசிவரவுசெலவு திட்டத்தை சென்னை சட்டசபையில் ஆஜர் செய்தார். அவர் அப்பொழுது செய்த பிரசங்கத்தின் சாராம்சத்தை இன்று வேறிடத்தில் பிரசுரம் செய்திருக்கிறோம். அவர் பொக்கிஷ மெம்பராக இருந்திருக்கும் இந்த 5 வருஷங்களும்கவர்ன்மெண்டுக்கும் பொது ஜனங்களுக்கும் மிகுந்த சோதனைக் காலமாக இருந்திருக்கிறது. பொருளாதாரச் சுணக்கத்தினால் சென்ற சில வருஷங்களாக அகவிலை மிகவும்குறைந்து விட்டதால் விவசாயிகள் மிகுந்த கஷ்ட நிலைமைக்கு ஆளாகிவிட்டனர். இந்த மாகாணமானது விவசாயத்தையே பெரிதும் நம்பியதாக இருந்து வருவதால் விவசாயிகளுடைய கஷ்டமானது மாகாணத்தினருக்கே ஏற்பட்ட கஷ்டம் என்று சொல்லலாம். இந்தக்கஷ்டமானது இதர மாகாணங்களிலும் ஏற்படாமலில்லை. ஆனால் அங்குள்ள கவர்ன்மெண்டுகளின் செல்வ நிலைமை திருப்திகரமானதாக இல்லாதபோதிலும், அவை விவசாயிகளுக்குத் தங்களாலியன்ற சவுகரியங்களைச் செய்து கொடுத்து வந்திருக்கின்றன. ஆனால் நமது மாகாண கவர்ன்மெண்டாரோ சவுகரியமானசெல்வநிலைமையிலிருந்து வந்தனர். முந்தின பொக்கிஷ மெம்பரான ஸர் தாமஸ் மாயர் லாபகரமான காரியங்களுக்கு வாங்கியிருந்த கடனைக் குறைத்துக் கொள்ளுவதற்காகக் கையிருப்பில் இருந்த தொகையில் பெரும்பாகத்தைக் கொடுத்திராவிடில், நமது மாகாண கவர்ன்மெண்டார் பணத்தில் மிதந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் இருந்துவருவார்கள். அவ்விதம் பெருந்தொகையைக் கையிருப்பில்வைத்துக் கொண்டால் விவசாயிகளுக்குப் பரிகாரமளிக்க வேண்டுமென்ற கிளர்ச்சி வலுப்பதற்கு இடமேற்பட்டுவிடுமோ வென்று அவர் பயந்துகொண்டு அதில் ஒரு பாகத்தைக் கடன் நிவாரணத்தில் கரைத்துவிட்டார். அவ்விதம் அவர் செய்தும் ஏராளமான தொகையைமிச்சம் வைத்துவிட்டுப்போனார். ஆகவே, நமது மாகாண கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய க்ஷேமத்திலேயே அதிக அக்கரையுடையவர்களாக இருந்தால், நேரிய செல்வ முறையைஅனுஷ்டிப்பதன்மூலம்இந்தக் கஷ்ட காலத்திலும் தங்களுடைய செல்வ நிலைமைக்கு எவ்விதப் பாதகமுமின்றி போதிய பரிகாரத்தை விவசாயிகளுக்கு அளிக்கலாம். முக்கியமாக, குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பது இப்பொழுது சாத்தியமாகயிருக்கையில் லாபகரமான மூலதன வேலைகளுக்கு வேண்டிய பணத்தை அவர்கள் கடனாக வாங்கிக்கொண்டு கையிருப்புப் பணத்தை விவசாயிகள் கஷ்ட நிவாரணத்திற்காக உபயோகித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் கூடியவரையில கடன் வாங்குவதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருமானத்திலிருந்தும், கையிருப்பிலிருந்தும் காவிரி-மேட்டூர்திட்டம் போன்ற மூலதன வேலைகளுக்குப் பெருந்தொகைகளை அவர்கள்செலவழித்து விட்டதன்மூலம்கையிருப்பைக் குறைத்துக்கொண்டு, சட்டசபை கோருகிறபடி நிலவரியை வஜாச் செய்து கொடுத்தால் நிர்வாகம் ஸ்தம்பித்துப்போய் விடவேண்டிவாராதாவென்றுவிதண்டாவாதம் செய்யக் கிளம்பி விட்டார்கள். இந்தப் பசலியில் அளித்திருக்கும் அளவு பரிகாரத்தை வருகிற பசலியிலும் அளிப்பதாயின் 1342-ம் பசலி முதல் 1345-ம் பசலிவரை நிலவரி இனத்தில் அளித்திருக்கும் மொத்த வஜா 205.20 லட்சம் ஆகிவிடுமென்று அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இவ்விதம் 4 பசலித் தொகையையும் கூட்டிச் சொன்னால் ஜனங்கள் மலைத்து, இதற்குமேல் எவ்விதம் பரிகாரம் கேட்பது என்று சின்னத்திருந்து விடுவார்களென்று அவர் நினைக்கிறார் போலும். இந்தத் தொகையிலிருந்து1345-ம்பசலிக்காகவும் சேர்த்திருக்கும் 54.69 லட்சம் ரூபாயைக்குறைத்து விட்டால் இந்தப் பசலியோடு கவர்ன்மெண்டார் அளித்திருக்கும் பரிகாரம் 150.51 லட்சம்தானாகிறது. இதைக்கண்டு ஒருவரும் மலைத்து விடமாட்டார்கள். கவர்ன்மெண்டாரிடம் உபரியாகப் பெருந்தொகை மிஞ்சியதற்கும்விவசாயிகளை அவர்களுடைய சக்திக்கு அதிகமாகக் கசக்கிப் பிழிந்ததே காரணமல்லவா? பொக்கிஷ மெம்பர் செல்வ பரிபாலனத்தில் லாபகரமான மூலதன வேலைகளுக்கு வருமானத்திலிருந்து பணத்தை எடுத்துக்கொள்ளும் நேர்மையற்ற முறையை அனுஷ்டித்திருப்பதோடு, சட்டசபை கோருகிறபடி வஜாக் கொடுக்காமலிருப்பதற்குத் தங்களுடைய சந்ததிகளாக வரப்போகும் கவர்ன்மெண்டிடம் திருப்திகரமான செல்வ நிலைமையில் மாகாணத்தை ஒப்புவித்து விட்டுப் போகவேண்டியதைக் காரணமாகச் சொல்லிவருகிறார். விவசாயிகளிடம் அவர்களுடைய சக்திக்கு மீறிய வரியை வசூல் செய்துவிடுவதன் மூலம் திருப்திகரமான செல்வ நிலைமையில் கவர்ன்மெண்டை வைத்திருப்பதாக அவர்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் விவசாயிகளைப் பல வருஷங்களாகத் தொடர்ந்து கசக்கிப் பிழிந்துவருவதால் அவர்கள் மிகுந்த க்ஷீணதசைக்கு வந்துவிடுவது எதிர்கால கவர்ன்மெண்டின் செல்வ நிலைமையை எவ்விதம் பாதிக்காமலிருக்க முடியும்? இந்த மாகாணத்தினருடைய நன்றிக்குப்பாத்திரமாகக் கூடிய காரியத்தைச் செய்யகூடிய காலத்தில் ஸர் ஹோப்டன்ஸ்டோக்ஸ் பொக்கிஷ மெம்பர் பதவியை வகித்திருந்தார். ஆனால் அவர் தம் பொறுப்புக்கு ஒரு தலைப்பட்சமான வழியில் அர்த்தம் செய்துகொண்டு விட்டதன் மூலம் அவர் தமக்கு வாய்த்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டாரென்றே சொல்லவேண்டும்.

இனி பொக்கிஷ மெம்பர் குறிப்பிட்டுள்ள கணக்கைக் கவனிப்போம். 1933-34-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் 1628.27 லட்சம் ரூபாய் வருமானம் எதிர்பார்த்தனர். ஆனால் 1603.06 லட்சம் ரூபாய்தான்கிடைத்தது. எனினும்அவர்கள்எதிர்பார்த்ததைவிடச்செலவு 30.85 லட்சம் குறைந்துவிட்டதால் வருஷக் கடைசியில் .61 லட்சம் மிச்சப்படுமென்று அவர்கள் எதிர்பார்த்திருந்ததற்குப் பதிலாக 6.25 லட்சம் ரூபாய் மிச்ச மேற்பட்டது. இதையும் கையிலிருந்த தொகையையும் சேர்த்து அந்த வருஷ இறுதியில் அவர்களிடத்தில் 284.60 லட்சம் ரூபாய் உபரியிருந்தது. 1934-35-ம் வருஷத்தில் 1643.63 லட்சம் ரூபாய் வருமானங்கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டது. ஆனால் 1602.57 லட்சம் ரூபாய்தான் கிடைத்தது. இவ்விதம் வருமானம் வெகுவாகக் குறைந்தும் செலவு அவர்கள் எதிர்பார்த்ததைவிட 17.56 லட்சம் குறைவாக இருப்பதால் வருஷக் கடைசியில் 19.04 லட்சம் துண்டு விழுகிறது. கையிருப்பிஅள்ள உபரித்தொகையில் இதற்கும் காவிரி—மேட்டூர் திட்டம் போன்ற மூலதன வேலைகளுக்கும் எடுத்துக்கொண்டது போக வருஷக் கடைசியில் 214.76 லட்சம் ரூபாய் மிச்சம் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1935-36-ம் வருஷத்தில் 1649.09 லட்சம் ரூபாய் வருமானம் வருமென்று பொக்கிஷ மெம்பர் எதிர்பார்க்கிறார். இதில் 1644.24 லட்சம் ரூபாய் செலவு ஏற்படுமென்றும், வருஷக் கடைசியில் வருமானத்தில் 4.85 லட்சம் ரூபாய் மிச்சப்படுமென்றும் அவர் மதிப்பிட்டிருக்கிறார். மூலதன வேலைகளுக்காகக் கையிருப்பிலிருந்து 77.11 லட்சம் செலவு செய்வது போக வருஷக் கடைசியில் 142.50 லட்சம் கையிருப்பிலிருக்குமென்று பொக்கிஷ மெம்பர் மதிப்பிட்டிருக்கிறார். வரவைக் குறைத்தும் செலவைப் பெருக்கியும் காட்டும் சம்பிரதாயத்தைப் பின்பற்றுவதற்கு இடமில்லாமற் செய்திருப்பதாக பொக்கிஷமெம்பர் ஒப்புக்கொண்டுள்ள நிலைமையில் வரவும் செலவும் அவர் எதிர்பார்க்கும் எல்லைக்குட்பட்டதாகவே இருக்குமென்று எதிர்பார்க்கலாம். மூலதன வேலைகளுக்காகக் கையிருப்பிலிருந்தும் வருமானத்திலிருந்தும் செலவு செய்யாமல் கடன்வாங்கிக் கொள்ளும் பக்ஷத்தில், சட்டசபை கோரியவளவு நிலவரியை ஏன் வஜாச் செய்யக் கூடாது? நிர்வாகம் ஏன் ஸ்தம்பிக்க வேண்டும்?

ராஜேந்திரபாபுவின் ஜபல்பூர் விஜயம்

ஜபல்பூர், பிப் 19—

காங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பாபு மார்ச் 2-வது வாரத்தில் இங்கு வருவார். அவருக்கு உற்சாகமான வரவேற்பளிக்க இங்கு ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றன.

பம்பாய் அட்வொகேட் ஜெனரல் பதவி

பம்பாய், பிப் 19—

ஸர் ஜாம்ஷெட் ஜீஜீபாய் ஸ்தானத்தில் பிப்ரவரி 27-ந்தேதிமுதல் மிஸ்டர் கின்னர் மாகின்டைர் பம்பாய் அட்வொகேட் ஜெனரலாக நியமிக்கப் பட்டிருப்பதை மன்னர்பிரான் அங்கீகரித்து விட்டாரென்று சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது. (அ-பி.)

காப்டன் ஹாட்ஜ்ஸன் கைதி

கல்கத்தா, பிப் 19—

போலீசாரால் தேடப் பட்ட குற்றவாளியென்று சர்க்காரால் அறிவிக்கப் பட்ட காப்டன் ஹாட்ஜ்ஸன் நேற்று கைதி செய்யப்பட்டார். தாம் தம்மீது சாட்டப்பட்ட நான்கு குற்றங்களையும் ஏற்றுக் கொள்ள விரும்புவதாக அவர் மாஜிஸ்திரேட்டிடம் கூறினார் நாளைவரை எதிரியை ரிமான்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்திரவிட்டார். ரூ. 2290 சம்பந்தமாய் எதிரி நம்பிக்கை மோசம் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

பம்பாய் ஆஸ்பத்திரி நிதி

பம்பாய், பிப் 19—

பம்பாய் ஆஸ்பத்திரி பராமரிப்பு நிதியார் சென்ற வருஷம் நடந்த உதவிநிதி விழாவில் வசூலான ரூ 1,70,000 ஐ பம்பாய் சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். பி. ஜெ. ஆஸ்பத்திரியில் இதன் மூலம் இன்னும் 36 குழந்தைகளுக்குப் படுக்கை வசதி யேற்படுத்தப்படும்.

'பிரீ பிரஸ்' வழக்கு

ராஜி ஏற்பாடு பலிக்கவில்லை

(நமது விசேஷ நிருபர்)

பம்பாய், பிப் 19—

ஸ்ரீமான் மாதுரி தாஸ் விஸ்ஸானஜீ 'பிரீ பிரஸ்' மீது தொடர்ந்திருக்கும் வழக்கு ஜஸ்டிஸ்கன்யா முன்பு ஆரம்பமாகி நடைபெற்றுகொண்டிருக்கும்போது, இருதரப்பு வக்கீல்களும் வழக்கை ராஜி செய்வதுபற்றிப் பேசிக் கொண்டிருந்ததால் மாலை 4-30 மணி வரை விசாரணை நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு பிரதிவாதி வக்கீல் வந்து ராஜி ஏற்பாடுபலிக்கவில்லையென்று அறிவித்தார். பிரதிவாதி தரப்பு கட்சியில் இரு திருத்தங்கள்செய்யவேண்டுமென அவர் வக்கீல் பிரேரித்தார். ஜட்ஜ் இதையனுமதிக்கவில்லை. பின்னர் ஜட்ஜ வழக்கைப்பற்றித் தம் அபிப்பிராயம் சொல்லுவதற்காக இருதரப்புவக்கீல்களையும்அழைத்தார். சுமார் பத்து நிமிஷ நேரம் சம்பாஷணை நடைபெற்று கோர்ட்டு முடிந்தது. சம்பாஷணையில் என்ன முடிவேற்பட்டதென்று தெரியவில்லை.

ராஜப்பிரதிநிதியின் ஜபல்பூர் விஜயம்

ஜபல்பூர், பிப் 19—

ராஜப்பிரதிநிதி 27-ந் தேதியன்று ஜபல்பூருக்கு இங்குள்ள படைகளுக்குக்கௌரவச்சின்னங்கள் வழங்குவதற்காக விமானத்தில் வருவாரென்று நம்பிக்கையுள்ள விடத்திலிருந்து தெரிய வருகிறது.—பு-பி

ரயில்வே வரவுசெலவு திட்டம்

ஓட்டுப்போடும் முறை

சட்டசபைக்கட்சிகளுக்குள் ஒப்பந்தம்

(அ-பிரஸ்)

புதிய டில்லி, பிப் 19—

இன்று ஸ்ரீமான் பூலாபாய் தேசாயின் கிருகத்தில் இந்தியா சட்டசபை காங்கிரஸ், தேசியக் கட்சிகளின் கூட்டமொன்றுநடைபெற்றது. ரயில்வே வரவுசெலவு திட்ட மான்யங்கள் சம்பந்தமாய் ஓட்டுசெய்வதில் ஒரு சில ஏற்பாடுகளைக்குறித்து ஒப்பந்தம் செய்து கொள்ளவே இக்கூட்டம் கூட்டப்பட்டது. சுயேச்சைக்கட்சியினரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். முக்கியமான வெட்டுப் பிரேரணைகளில் மூன்று கட்சியாரும் சேர்ந்து ஓட்டுச் செய்வது பற்றி தற்காலிகமாக ஒப்பந்தமேற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. ரயில்வே போர்டு மானியத்தை ஒரு ரூபாய்க்குக் குறைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியார் ஒரு பிரேரணை கொண்டுவருவார்கள். இந்திய அரசியல் மசோதாப்படி ரயில்வே அதிகாரம் பார்லிமெண்டு சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா சட்டசபையின் சட்டங்களுக்குட்பட்டே ரயில்வே போர்டு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று இந்தியா சட்டசபை ஏற்கனவே அபிப்பிராயம் தெரிவித்துள்ளது. ஆகவே இப்பிரச்னையைக் குறித்து பிப்ரவரி 22-ந் தேதி முழுவதும் விவாதம் நடக்குமென்று தெரிகிறது.

மான்யங்களைச் சம்பந்தித்த அலுவல்கள் இன்னும் மூன்று நாட்கள் நடைபெறும். மூன்றுவது வகுப்புப் பிரயாணிகளின் கஷ்டங்களைக் குறித்துத் தங்கள் குறைகளை வெளியிட 23-ந் தேதியன்று அரைநாள் சுயேச்சைக் கட்சியாருக்கு விடுவதென ஏற்பாடாகியிருக்கிறது. பிற்பகலில் ரயில்வே இலாக்கா ஸ்டோர் பொருள்கள் வாங்குவதைப்பற்றி தேசியக் கட்சியங்கத்தினர்கள் பேசுவார்கள். 25-ந் தேதி ஐரோப்பியரும் தனியாகவிருக்கும் கட்சியினரும் பேசுவார்கள். ரயில்வே தொழிலாளர் வேலையில்லாத்திண்டாட்டம் முதலியவற்றைக் குறித்து 25-ந் தேதி ஸ்ரீமான் ஜோஷி பேசுவார். அன்று மாலை 5-மணிக்கு விவாதத்தை முடிக்கப் பிரேரணை கொண்டுவரப்படும்.

ஸ்ரீமான் புலாபாய் தேசாய் கிருகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாப் ஜின்னாவும் பங்கெடுத்துக்கொண்டார்.

ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் தாம் பூரணமாய் ஒத்துழைப்பதாக ஜனாப்ஜின்னா கூறியிருக்கிறார். ஸ்ரீமான் ஆனே கூட்டத்திற்கு வராததால், அவருக்கு இவ்வொப்பந்தத்தைப் பற்றி தகவல் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீமான் கமல் சர்க்காருக்குத் தண்டனை

ராஜத்துவேஷ வழக்கு

கல்கத்தா, பிப் 19—

சென்ற நவம்பர் 22-ந்தேதி வங்க வாலிபர் சங்கத்தினுதரவில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீமான் கமல் சர்க்கார் செய்தபிரசங்கத்தில் ராஜத்துவேஷ முண்டுபண்ணத்தக்க விஷயங்களிருந்ததாகச் சொல்லி அவர் மேரில் வழக்குத் தொடரப்பட்டது. பிரதம ராஜதானி மாஜிஸ்திரேட்டு எதிரிக்கு ஒருவருட கடுங்காவல் தண்டனை விதித்தார். எதிரிபோல்ஷிவிக்கொள்கைகளைப்பின்பற்றுபவரென்றும் போல்ஷிவிக் இயக்கத்தை சர்க்கார் அடக்குவதையவர் வெறுப்பதாகவும் மாஜிஸ்திரேட்டு தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சிகாஜாட்டுகள் கிளர்ச்சி

ராஜி ஏற்படலாம்

புதிய டில்லி, பிப் 19—

சிகார்ஜாட்டுகள் கிளர்ச்சி சம்பந்தமாக வந்த தந்தியிலிருந்து நிலைமை முன்னிலும் நெருக்கடியாக இருப்பதாகத் தெரிகிறது. சிகார்ஜாட்டுகளின் குறைகளைப் பற்றிக் கவலைப்படும் சிலஜாட் தலைவர்கள் காப்டன் லால்சந்து (இந்தியா சட்டசபை மெம்பர்) ஸ்ரீமான் ஜாமான்சிங் (அகில இந்திய ஜாட்மகாசபைக்காரியதரிசி) இவர்களது தலைமையில்இன்றிரவு சிகாருக்குப் புறப்பட்டுச் சென்றனர். சமாஸமான ராஜி ஏற்படுமெனத் தோன்றுகிறது —பு-பி.

பீஹார் சட்ட சபை

உத்தியோகப் பற்றற்றவர்களது பிரேரணைகள்

பல வாபீஸ் பெறப்பட்டன

பாட்னா, பிப் 19—

இன்றையதினம் பீஹார் சட்டசபையில் ஜனாப் ஹாஸன்ஜான் எந்தக்காலேஜிலும் பி.எஸ்.ஸி. வகுப்புக்குவேண்டிய அளவுக்கு ஜீவதத்துவ சாஸ்திர போதனை செய்ய வேண்டுமென்று கொண்டு வந்த தீர்மானத்தை உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்கள் பலர் ஆதரித்தனர். கல்வி மந்திரி ஜனாப் அலீஸ் இதில் அநுதாபம் தெரிவித்தபோதிலும், பண நெருக்கடியின் காரணமாக இக்கோரிக்கையை அமுலுக்குக் கொண்டுவர முடியாதென்றும்பணம்கிடைத்தவுடன்இதனைப்போதிக்கசர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவாரென்றும் கூறினார். பிரேரணை வாபீஸ் பெறப்பட்டது. சாகுபடி நிலங்கள் தரிசாகக் கிடப்பதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென ஸ்ரீமான் ஜகந்நாத தாஸ் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இதற்கான உருவான திட்டத்தை எடுத்துரைக்கும்படி சர்க்கார் இப்பிரேரணையைக்கொண்டுவந்தவரையும் அதனை ஆதரித்தவர்களையும் கேட்டுக்கொண்டார்கள். பிரேரணைவாபீஸ் பெறப்பட்டது. கட்டாக் நகரில் வாட்டர் ஒர்க்ஸ் ஏற்படுத்தவேண்டுமென ராய்பகதூர் லக்ஷ்மிதார் மகந்தி கொண்டுவந்த பிரேரணை வாக்குகள்கணக்கிடப்படாமலே நிராகரிக்கப்பட்டது. சர்க்கார் கட்டாக் முனிஸிபாலிட்டியின் செல்வ நிலைமை ஸ்திரப்படாதவரைஅதிகச்செலவு பிடிக்கும் இம்மாதிரியான ஜல சப்ளைத்திட்டத்தைப்பற்றி யோசிக்க முடியாதெனக் கூறினர். ஜனாப் அப்துல் கனி மாகாண ஊழியவர்க்கத்திற்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப்பரீக்ஷைகளைப் பகுதி பகுதியாக நடத்தவேண்டுமென்று சட்டசபை செய்த தீர்மானத்தை அமுலுக்குக்கொண்டு வருவதற்காக சர்க்கார் அத்தீர்மானம் பற்றிப் புனராலோசனை செய்யவேண்டுமென வற்புறுத்தினார். சர்க்கார் இவ்விஷயத்தைப் புதிய அரசியல் அமுலுக்குவரும் வரை நிறுத்திவைப்பது உசிதமென்றும், புதிய அரசியலில் மாகாண சர்விஸுக்கானஆட்களைச்சேகரிக்கும்பரீக்ஷைகளைப்பப்ளிக் சர்விஸ் கமிஷன்மூலமே நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறினர். இத்தீர்மானம் பற்றி விவாதம்நடக்கும்பொழுது சபை ஒத்திவைக்கப்பட்டது.—அ-பி.

டாக்டர் தாகூர்

வங்காளிகள் உபசாரம்

லாகூர், பிப் 19—

இன்று மாலை இங்குள்ள வங்காளிகள் டாக்டர் ரவீந்திரநாத் தாகூருக்கு உபசாரமொன்று நடத்தினார்கள். தாகூருக்கு ஒருபண முடிப்பும் அளிக்கப்பட்டது. விசுவபாரதியின் லக்ஷியத்தை யவர் எடுத்துரைத்தார்.

பொதுஜன சேவா சங்கத்தாருக்கு விடுத்த ஒரு செய்தியில் கவீந்திரர் பின்வருமாறு கூறினார்.

உலக நாகரீகங்களனைத்தையும் ஒன்று சேர்ப்பது என் நோக்கம். என் நாட்டினர். இதை உணர்ந்து கொள்ளவில்லை இதுஎனக்குவருத்தத்தைக் கொடுக்கிறது

நான் யாசகம் கேட்க ஒவ்வோரிடத்திற்கும் செல்லுகிறேன். இது அவமானமென்று நான் கருதவில்லை. உங்களுக்காகவே நான் பிச்சையெடுக்கிறேன். அரசியல் விஷயங்களில் நான் கலந்து கொள்ள மாட்டேன். இதை இன்னுமனேகர் உணராதிருக்கின்றனர்.

ரயில்வே அபிவிருத்தி

சர்க்கார் தீர்மானம்

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

புதியடில்லி, பிப் 19—

இந்திய ரயில்வேக்களில் அபிவிருத்திகளை அவ்வப்போது செய்ய வேண்டுமென்று போப் கமிட்டி செய்த சிபார்சை யமுலுக்குக் கொண்டு வரும் உத்தேசத்துடன் மத்திய ஸ்டாண்டர்டு காரியாலயத்தை நிரந்தரமாக்கவும் சிப்பந்திகளின் தொகையை அதிகரிக்கவும் சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள். 1929-ம் வருஷம் இந்த ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. இயந்திரங்கள் தந்திக் கருவிகள் முதலியவை எவ்வாறிருக்க வேண்டுமென்று இந்த ஸ்தாபனத்தார் ஆலோசனை கூறி வந்தார்கள். ரயில்வே வண்டிகள் இஞ்ஜின்கள் முதலியவை சம்பந்தமாகவும் அவர்கள் ஆலோசனை சொல்லி வந்திருக்கிறார்கள்.

வைசிராயை நீக்கும் உரிமை

சமஷ்டியில் மன்னர் சேர்க்கை

இந்திய அரசியல் மசோதா திருத்தங்கள்

கமிட்டியாலோசனை விவரம்

(ராய்ட்டர்)

லண்டன், பிப் 19—

இந்திய அரசியல் மசோதா கமிட்டியாலோசனை யாரம்பமாகிவிட்டது. முதலில் ஆலோசனை நடைமுறையைக் குறித்து விவாதம் நடந்தது. பிறகு இந்திய அரசியல்சட்டத்திற்கு பெயர் கொடுப்பதைப்பற்றிய விவாதத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கர்னல் வெட்ஜ்வுட் ஒரு பிரேரணை கொண்டு வந்தார். ஸர் ஸாமியுல்ஹோர் இப்பிரேரணையை ஏற்றுக்கொண்டார். ஆதலால் சட்டத்துக்குப்பெயர் கொடுப்பதைப்பற்றிக்கொண்டுவரப்பட்டநான்கு திருத்தங்களின் ஆலோசனையும் ஒத்திவைக்கப்பட்டது. 'இந்தியக் குடியேற்ற நாட்டு சுயாட்சிச் சட்டம்' எனப் பெயர் கொடுக்க வேண்டுமென்று தொழிற் கட்சியார் ஒருதிருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அரசர் முகமான இந்தியாவின் ஆட்சியைக் குறித்தபிரிவு மிஸ்டர் ரெஜினல்டு கிராடக்கின் சிறு திருத்தத்துடன் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் நான்கு திருத்தங்கள் பைசல் செய்யப்பட்டன. பிறகு ராஜப்பிரதிநிதி யென்ற ஹோதாவில், கவர்னர் ஜெனரலுக்கும் சமஸ்தானங்களுக்கு மிருக்க வேண்டிய உறவைப்பற்றிய விவாதம் நடந்தது.

இந்திய ஆலோசனைக்கமிட்டி என்ற பெயருடன் கூடிய பிரிவி கவுன்ஸிலைக் கலந்து கொண்டே ராஜப்பிரதிநிதி நியமிக்கப்படவேண்டுமென்று ஸர் ராபர்ட் ஹார்ன் ஒருதிருத்தம்கொண்டுவந்தார். இத்திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வியலாதென்றும், ஆயினும் மெம்பர்களின் அபிப்பிராயத்தைத் தாங்களறிய விரும்புவதாகவும் ஸர் ஸாமுவேல் ஹோர் கூறினார். விவாதத்திற்குப் பிறகு ஸர் ராபர்ட்ஹோர்ன் தம் திருத்தத்தை வாபீஸ் வாங்கிக் கொண்டார்.

சமஷ்டி பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மாத்திரமிருக்கவேண்டுமா சமஸ்தானங்களையும் சேர்த்துக் கொண்டதாயிருக்கவேண்டுமா வென்பதைப்பற்றியாலோசிக்க கர்னல் வெட்ஜ்வுட் கொண்டு வந்ததிருத்தம்அடுத்தபடியாக எடுத்துக் கொள்ளப் பட்டது. சிறிதுநேர விவாதத்திற்குப் பிறகு தாம் இப்பிரச்னையைப் பிறகு கிளப்புவதாக கர்னல் வெட்ஜ்வுட் கூறிவிட்டார்.

பார்லிமெண்டு சபைகளிரண்டின் வேண்டுகோளின் பேரில் வைசிராய் அப்பதவியினின்றும் மன்னர் பிரானால் நீக்கப்படலாமென மிஸ்டர் ஓல்மர் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்.

இவ் வேற்பாடு பெரிய தவறாகுமென்றும் இதன் மூலம் விபரீதங்கள் விளையக் கூடுமென்றும் ஸர். சாமுவேல் ஹோர்கூறினார். உத்தியோகத்தை ராஜினமாச் செய்யும்படி பார்லிமெண்டு கோருவதைக் காட்டிலும் மோசமான ஏற்பாடேகிடையாதென்றும் அவர் குறிப்பிட்டார் மிஸ்டர் ஓல்மரின்திருத்தத்திற்கு சாதகமாக 49 பேரும் பாதகமாக 324 பேரும் ஓட்டுச் செய்ததால் திருத்தம் தோற்றது.

2-ம்பாகம்

உடனே மசோதாவின் இரண்டாம்பாகம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இதில் ஐந்தாவது ஆறுவது பிரிவு ஆலோசனையை ஒத்திவைக்கும்படி மிஸ்டர் சர்ச்சில் ஒருபிரேரணைகொண்டுவந்தார் ஸர் ஹோர் இப்பிரேரணையை எதிர்த்தார் அரைமணி நேர விவாதத்திற்குப் பிறகு திருத்தம்தோற்றது. 290பேர் விரோதமாகவும் 41-பேர் சாதகமாகவும் ஓட்டுக் கொடுத்தனர்.

மிஸ்டர் ஓல்மர் தமது திருத்தத்தை யாதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: இயலாதகாரியங்களை ராஜப்பிரதிநிதியின் வசம் சர்க்கார் ஒப்படைக்கிறார்கள். ராஜப்பிரதிநிதியாயிருப்பவருக்கு அசாதாரணமான அனுபவம் பார்லிமெண்டு பயிற்சி, உள்ள உறுதி, நிர்வாகத்திறம் முதலியவையிருத்தல் வேண்டும்.

சமஸ்தான மந்திரிகள்

டில்லியில் மகாநாடு

புதிய அரசியல்பற்றி யோசனை

(நமது விசேஷ நிருபர்)

புதுடில்லி, பிப் 20—

இந்தியாவிலுள்ள 14 முக்கிய சமஸ்தானங்களின் மந்திரிகளது மகாநாடு நேற்றுஆரம்பமாயிற்று இந்திய அரசியல் மசோதாவைக் குறித்த ஆலோசனையை அவர்கள் துவக்கி விட்டார்கள். மசோதாவின் முதல் ஆறு பிரிவுகளையும் குறித்து அவர்கள் ஆலோசித்திருக்கின்றனர்: ஆறுவது பிரிவில் கண்டவிஷயங்களையவர்கள் பொதுவாக அங்கீகரிக்கின்றனர். இப்பிரிவுகள் சமஷ்டியையும், சமஷ்டியில் சமஸ்தானங்கள் சேருவதையும்பற்றிய பிரச்சினைகளைச் சம்பந்தித்தது. இன்னும் சிலதினங்கள் கூட்டம் நடைபெறும். பிறகு மந்திரிகள் பம்பாயில் நடைபெறவிருக்கும் சமஸ்தானாதிபதிகள் மகாநாட்டுக்குச் செல்லுவார்கள். அதற்குள் மன்னர்களுக்கான ஆக்ஞாபத்திரமும் வந்துவிடும். மன்னர்கள் மசோதாவில் வகுக்கப்பட்டுள்ள முறையில் சமஷ்டியை ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்று வெளியான செய்தி மறுக்கப்படுகிறது. ஸர் மனுபாய் மேத்தா, வகுத்தமுறையில், சில திருத்தங்களை மாத்திரமே மன்னர்கள் கோருவர்.

தம்குமாரி தேக அசௌக்கியமாயிருப்பதாகத் தகவல் தெரிந்து ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் சென்னைக்குப் போய்விட்டதால் அவர் இன்றைய கூட்டத்திற்குப் வரவியல வில்லை.

போட்டோ சினிமா ரேடியோ பொருட்காட்சி

பம்பாய், பிப் 19—

நேற்று ஸர் எம். விச்வேச்வரய்யா பம்பாய் டவுன் ஹாலில மேற்படி காட்சியைத் திறந்து வைத்தார். ஸ்ரீமான் ஜாதவ் இப்பொருட்காட்சியின் வரலாற்றையும் அவசியத்தையும் எடுத்துரைத்தார். இத்தகைய பொருட்காட்சியால் போட்டோ, சினிமா ரேடியோ துறைகளில் தொழில் அதிகரிக்குமென்று ஸர் எம். விச்வேச்வரய்யா குறிப்பிட்டார்.

அருண்டேல் தம்பதிகள்

சென்னை, பிப் 19—

பம்பாய், மத்திய மாகாணங்களில் சுற்று பிரயாணம் செய்வதற்காக டாக்டர் அருண்டேல் தம்பதிகள் நாளை சென்னையிலிருந்து புறப்படுவார்கள் முதலில் அவர்கள் அகோலாவிலிறங்கி மூன்று தினங்கள் தாமதிப்பார்கள். பிறகு அவர்கள் நாகபுரி செல்லுவார்கள். 21-ந் தேதி அஜாந்தாவுக்கும் 28-ந் தேதி பம்பாய்க்கும் அவர்கள் போவார்கள். அங்கிருந்து வேறு பலவிடங்களுக்குப் போய்விட்டு மார்ச் 19-ந்தேதி சென்னை வந்து சேருவார்கள்.

தேசிய சர்க்கார் ஆயுள்

இந்த மத்தியில் தேசிய சர்க்கார் திருத்தியமைப்பைப்பற்றிப்பலவிதமான செய்திகள் வருகின்றன. மந்திரி சபை திருத்தியமைக்கப்படலாமென்று எதிர்பார்க்கக் காரணங்களிருக்கின்றன. இந்தியப் பிரச்னை, வாவர்ட்ரீ தேர்தல் முடிவு, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை முதலியவை சர்க்கார்பால் அவநம்பிக்கையை உண்டுபண்ணிவிட்டன. ஆயினும்மிஸ்டர் மாக்டனால்டையும், மிஸ்டர் பால்ட்வினையும் வெளியேற்றி பொதுத் தேர்தலை துரிதப்படுத்த பிற் போக்காளர் துணியவில்லை. மிஸ்டர் லாயிட்ஜார்ஜின் புதிய கிராம புனருத்தாரணத் திட்டம் தேசிய சர்க்காரிடையே சஞ்சலத்தை உண்டுபண்ணிவிட்டது. ஒருகால் பொதுத் தேர்தல் நடைபெற்று தேசிய சர்க்கார் வெற்றி பெறுமானால் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அந்த மந்திரி சபையில் சேருதல் கூடும். இப்பொழுது அவர் சேரமாட்டார்.

அடுத்த தேர்தலில் ஸீஹாம் தொகுதியில் மிஸ்டர் மாக்டனால்டு வெற்றி பெறுவதே சந்தேகம்தான்.